கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஜனவரி-பெப்ரவரி 2018)

# SAS 3133 Sociology of Religion

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி–I

01. (அ) சமயம் பற்றிய சமூகவியல் என்பதனால் நீர் கருதுவது யாது?
(12 புள்ளிகள்)

(ஆ) புனிதம், புனிதமின்மை ஆகிய எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விளக்குக.
(13 புள்ளிகள்)

02. (அ) சமயத்துக்கும், பண்பாட்டுக்குமான தொடர்புகளை விளக்குக
(12 புள்ளிகள்)

(ஆ) சமூக உறுதிப்பாட்டுக்குச் சமயம் உதவுமாற்றினைத் தெளிவுபடுத்துக.
(13 புள்ளிகள்)

03. (அ) மதம் ஒரு போதைப் பொருள் என்று கார்ள்மார்க்ஸ் கூறுவதற்கான காரணத்தைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.
(12 புள்ளிகள்)

(ஆ) எமில்டோர்க்கீம் குறிப்பிடும் குலக்குறிவாதத்தின் பிரதான அம்சங்களை எடுத்துரைக்குக.
(13 புள்ளிகள்)

04. (அ) மலினோவ்ஸ்கி சமயத்தின் வகிபாகங்களை எவ்வாறு எடுத்துரைத்துள்ளார்?
(12 புள்ளிகள்)

(ஆ) ஆரம்பகாலச் சமயம் தொடர்பான E.V.டைலருடைய சிந்தனைகளைத் தொகுத்து விளக்குக.
(13 புள்ளிகள்)

## பகுதி–II

05. சமயவாழ்வின் ஆரம்ப வடிவங்கள் தொடர்பில் எமில் டோர்க்கீம் பேசும் சிந்தனைகளை விரிவாக முன்வைத்து சமகால நிலைமைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.
(25 புள்ளிகள்)

06. சமகாலத்தில் புதிய சமய இயக்கங்கள் உருவாகிவரும் சூழ்நிலை தொடர்பிலும், அதற்கான பின்புலக்காரணிகள் பற்றியும் விரிவாக ஆராய்க.
(25 புள்ளிகள்)

*****